## 23.DIRECTIONS RELATED PROBLEMS

1. நிஷா என்பவர் வீட்டிலிருந்து மேற்கு நோக்கி 8 கிமீ தூரம் நடந்து பின்னர் தெற்குத்திசையில் 12 கிமீ நடந்தார். இறுதியில் கிழக்கு நோக்கி 8 கிமீ நடந்து ஓரிடத்தை அடைந்தார்.எனில், தற்போது அவர் வீட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளார்?

   1) 8 கிமீ 2) 12 கிமீ
   3) 10 கிமீ 4) 20 கிமீ

2. X என்பவர் 25 மீ கிழக்கு நோக்கி நகர்ந்து வலதுபக்கம் திரும்பி 40மீ தூரம் நடந்து பின்னர் நின்று விடுகிறார். எனில், ஆரம்ப இடத்தில் இருந்து எந்த திசையில் நிற்கின்றார் ?

   1) வடகிழக்கு 2) தென்கிழக்கு
   3) தென்மேற்கு 4) வடமேற்கு

3. X-க்கு தென்மேற்கு திசையில் 25 மீ தூரத்தில் Y என்பவரும், Y-க்கு தென்கிழக்கில் 25மீ தூரத்தில் Zஎன்பவரும் உள்ளார். எனில், Xலிருந்து Zன் திசை யாது?

   1) கிழக்கு 2) மேற்கு
   3) தெற்கு 4) வடக்கு

4. சதீஸ் என்பவர் கிழக்கு திசையில் நின்று கொண்டு இருக்கின்றார். பின்னர், $90^\circ$ கடிகார எதிர்திசையில் திரும்பி, மீண்டும் கடிகார திசையில் $90^\circ$ திரும்புகிறார். மீண்டும் கடிகார எதிர்திசையில் $180^\circ$ திரும்பினால், அவர் தற்போது எத்திசையை நோக்கி நிற்பார்?

   1) கிழக்கு 2) மேற்கு
   3) வடக்கு 4) தெற்கு

5. ஷாலினி என்பவர் மேற்கு நோக்கி திரும்பியுள்ளார். பின்னர், $45^\circ$ அளவில் கடிகார எதிர்திசையில் திரும்பி, மீண்டும் கடிகார திசையில் $180^\circ$ திரும்பினால், அவர் தற்போது எந்த திசையை நோக்கி

நிற்பார்?

1) கிழக்கு 2) வடமேற்கு

3) வடகிழக்கு 4) தென்மேற்கு

6. மகேஷ் என்பவர் ஓரிடத்திலிருந்து 30மீ கிழக்குத் திசையில் நகர்ந்து வலப்புறம் திரும்பி 30 மீ நடக்கின்றார். பிறகு, இடப்புறம் திரும்பி 30 மீ நடக்கிறார். மீண்டும் இடதுபுறம் திரும்பி 15 மீ நடக்கின்றார். இறுதியாக தனது இடப்புறம் திரும்பி 60 மீ நடந்து ஓரிடத்தை அடைகிறார். எனில் , ஆரம்ப இடத்திலிருந்து தற்போது எவ்வளவு தொலைவில், எத்திசையில் நிற்கின்றார்?

1) 20 மீ வடக்கு

2) 30 மீ தெற்கு

3) 30 மீ மேற்கு

4) 15 மீ தெற்கு

7. X என்பவர் 10மீ கிழக்குத் திசையில் சென்று பின்னர் கடிகார திசையில் $90^{\circ}$ திரும்பி 8மீ நேராகச் செல்கின்றார். மீண்டும் $90^{\circ}$ திரும்பி 16மீ நேராக செல்கிறார்.எனில் அவர் புறப்பட்ட இடத்தில் இருந்து எத்திசையில் இருப்பார்?

1) வடக்கு 2) வடமேற்கு

3) தென்கிழக்கு 4) தென்மேற்கு

8. ஒருவர் 24மீ உயரமுள்ள கொடிமரத்தின் அடியில் இருந்து கிழக்குத் திசையில் 7 மீ செல்கின்றார். அங்கிருந்து கொடிமரத்தின் உச்சியைப் பார்க்கிறார். எனில், அவருக்கும் கொடிமரத்தின் உச்சிக்கும் இடைப்பட்ட தொலைவு யாது?

1) 8 மீ 2) 24மீ

3) 25மீ 4) 16மீ

9. நமிதா என்பவர் வீட்டிலிருந்து வடக்கு நோக்கி 3கிமீ தூரம் நடந்து சென்று, பின்னர் தனது இடதுபுறம் திரும்பி 2கிமீ தூரம் நடக்கின்றார். பின்னர், மீண்டும் தனது இடதுபுறம் திரும்பி 3கிமீ தூரம் நடக்கின்றார். தற்போது அவர் புறப்பட்ட

இடத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளார்?

1) 1 கிமீ 2) 2 கிமீ

3) 3 கிமீ 4) 5 கிமீ

10. ஒரு நாள் ரவி என்பவர் வீட்டிலிருந்து தனது மிதிவண்டியில் தெற்கு நோக்கி 10 கிமீ தூரம் சென்று பின்னர் வலதுபுறம் திரும்பி 5கிமீ தூரம் செல்கின்றார். பின்னர் மீண்டும் வலதுபுறம் திரும்பி 10 கிமீ தூரம் செல்கின்றார், அவரது வீட்டிற்கு நேராக செல்ல வேண்டுமெனில் எவ்வளவு கி.மீ அவர் தனது மிதிவண்டியில் பயணிக்க வேண்டும்?

1) 10கிமீ 2) 5கிமீ

3) 25கிமீ 4) 35 கிமீ

11. ஒரு சிறுமி அவள் வீட்டிலிருந்து வடமேற்கு திசையில் 30மீ தூரம் சென்று பின்னர் தென்மேற்கு திசையில் 30மீ தூரம் நடக்கின்றார். பின்னர், அவர் தென்கிழக்கு திசையில் 30 மீ தூரம் நடக்கின்றார். இறுதியாக அவள் தன் வீட்டை நோக்கித் திரும்புகிறாள். எனில், தற்போது எத்திசையில் அவள் நின்று கொண்டிருக்கிறாள்?

1) வடகிழக்கு 2) வடமேற்கு

3) தென்கிழக்கு 3) தென்மேற்கு

**வழிமுறை ( 12 - 13 )**

நான் ஒரு பூங்காவின் மையத்தில் நின்றுகொண்டிருக்கின்றேன். நான் கிழக்குத் திசையை நோக்கி நிற்கின்றேன். சுரேஷ் தென்மேற்கு திசையை நோக்கியும், அதே வேளையில் முகேஷ் வடமேற்கு திசையை நோக்கியும், ராஜா வடகிழக்கை நோக்கியும் நிற்கின்றனர். நாங்கள் ஒவ்வொருவரும் $90^\circ$ அளவில் கடிகார திசையில் திரும்புகிறோம். எனில்,

12. தற்போது நான் நோக்கும் திசை?

1) தென்கிழக்கு 2) தெற்கு

3) தென்மேற்கு 4) மேற்கு

13. முகேஷ் என்பவர் எத்திசையை நோக்கி நிற்கின்றார்?

1) வடக்கு 2) வடகிழக்கு
3) கிழக்கு 4) தென்கிழக்கு

**வழிமுறை ( 14 - 15 )**

நான் எனது வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி 5 கிமீ தூரம் சென்று பின்னர் இடதுபுறம் திரும்பி 3 கிமீ தூரம் சென்றேன். மீண்டும், நான் இடதுபுறம் திரும்பி 3 கிமீ தூரம் சென்றேன். முடிவில், நான் இடதுபுறம் திரும்பி 3 கிமீ தூரம் சென்றேன். எனில்,

14. நான் எனது வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளேன்?

1) 14 கிமீ 2) 8 கிமீ
3) 11 கிமீ 4) 2 கிமீ

15. நான் எனது வீட்டிலிருந்து தற்போது எத்திசையில் நிற்கின்றேன்?

1) கிழக்கு 2) மேற்கு
3) வடகிழக்கு 4) தெற்கு

16. தென்கிழக்கு என்பது கிழக்கு திசையாகவும், வடமேற்கு என்பது மேற்கு திசையாகவும், தென்மேற்கு என்பது தெற்கு திசை எனவும் அழைக்கப்பட்டால் வடக்கு திசை எவ்வாறு அழைக்கப்படும்?

1) கிழக்கு 2) வடமேற்கு
3) தெற்கு 4) வடகிழக்கு

17. ‘ A ’என்பவர் 10மீ முன்நோக்கி சென்று, வலது புறம் திரும்பி 10மீ சென்று, பின்னர் ஒவ்வொரு முறையும் தனது இடதுபுறமாக முறையே 5, 15, மற்றும் 15 மீட்டர்கள் செல்கின்றார். அவர் தற்போது புறப்பட்ட இடத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளார்?

1) 5 மீட்டர் 2) 10மீட்டர்
3) 15 மீட்டர் 4) 20 மீட்டர்

18. விஜய் என்பவர் கிழக்கு நோக்கி நிற்கின்றார். பின்னர் கடிகார திசையில் $90^\circ$ திரும்புகிறார். பின்னர், $180^\circ$ அளவில் எதிர் கடிகார திசையிலும், மீண்டும் $90^\circ$ அளவில் கடிகார திசையிலும் திரும்புகின்றார். எனில், அவர் தற்போது எத்திசையை நோக்கி நிற்கின்றார்?

1) கிழக்கு 2) மேற்கு
3) தெற்கு 4) தென்கிழக்கு

19. அசோக் வடக்குத் திசையில் 15 கிமீ தூரம் சென்று, பின்னர் இடதுபுறம் திரும்பி மற்றொரு 4 கிமீ தூரம் செல்கின்றார். பின்னர் இடதுபுறம் திரும்பி மீண்டும் 12கிமீ தூரம் நடக்கின்றார். அவர் புறப்பட்ட இடத்திலிருந்து எவ்வளவு தொலைவில் எத்திசையில் உள்ளார்?

1) 7கிமீ, வடக்கு
2) 5 கிமீ, வடகிழக்கு
3) 5 கிமீ, வடமேற்கு
4) 11 கிமீ, தென்கிழக்கு

20. இரு நபர்கள் எதிரெதிர் திசையில் (முதுகுப்புறம் ஒட்டியவாறு) அமர்ந்துள்ளனர். முதல் நபரின் முகம் தெற்கு நோக்கி உள்ளது. இரண்டாவது நபரின் இடது கையானது எத்திசையில் அமையும்?

1) கிழக்கு 2) மேற்கு
3) வடக்கு 4) தெற்கு